மட்/ககு/பேத்தாழை விபுலானந்தா கல்லூரி
பல்தேர்வு வினாக்களின் தொகுப்புக்கள்
க.பொ.த. (உயர்தரம்) – 2020

அத்தியாயம் ஆறு (நியாயத்தொடை அனுமானம்)

எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

பகுதி - 01

01. வாய்ப்பான நியாயத்தொடை வாதம் ஒன்றில் ஒரு எடுகூற்று குறை எடுப்பாகின்ற போது அதன் முடிவு

1. தனிவிதியெடுப்பாகும்
2. குறைவிதியெடுப்பாகும்
3. குறை எடுப்பாகும்
4. குறைமறை எடுப்பாகும்
5. தனிமறை எடுப்பாகும்.

02. பின்வரும் கூற்றுக்களில் சரியானது

1. பேரெடு கூற்று குறை எடுப்பாக இருக்கும் போது சிற்றெடுகூற்று மறைஎடுப்பாயின் சிறு பதப்போலி ஏற்படும்.
2. யாதாயினும் ஒரு எடுகூற்று குறையெடுப்பாக இருக்கும் போது முடிவு குறை எடுப்பு ஆயினும் கூட நியாயத்தொடை வாய்ப்பற்றதாகும்
3. எடுகூற்றுக்கள் இரண்டும் விதியெடுப்பாயினும் கூட நியாயத்தொடை வாய்ப்பற்றதாகும்
4. மத்தியபதம் எடுகூற்றில் ஓரிடத்தில் வியாப்திஅடையுமாயின் கட்டாயம் நியாயத்தொடை வாய்ப்பானதாகும்.
5. வாய்ப்பான நியாயத்தொடை ஒன்றில் யாதாயினும் ஓர் எடுகூற்று மறை எடுப்பாயின் முடிவு விதியெடுப்பாக இருக்க முடியாது

03. A M P
A M S
I S P மேற்குறித்த தர்க்க வடிவத்தை வெளிக்காட்டும் சூத்திரம் எது.

1. DARAPTI
2. BARAMINIP
3. DATISI
4. DIRAPIT
5. FIRASION

04. I MP
A MS
I SP மேற்குறித்த தர்க்க வடிவத்தை வெளிக்காட்டும் சூத்திரம் எது.

1. DIMARIS
2. DATIST
3. DISAMIS
4. DIRAPIT
5. FIRASION

05. வலிதான மறுத்து உடன்படும் ஆகாரியின் தர்க்க வடிவம்

1. A ஆயின் b அன்று, a ஆகும் ஆகவே b அன்று
2. A ஆயின் b ஆகும், a ஆகும் ஆகவே b ஆகும்
3. a அன்று ஆயின் b அன்று, a அன்று ஆகவே b ஆகும்.
4. இதில் எதுவும் அடங்காது

www.lkedu.lk

5. a அன்று ஆயின் b ஆகும் a அன்று ஆகவே b ஆகும்.

06. ‘‘ஆசிரியர்கள் பட்டதாரிகள் ஏனெனில் ஆசிரியர்களும் பட்டதாரிகளும் நேர்மையானவர்கள்’’ என்பதனால் எனும் வாதத்தில் மீறப்பட்டுள்ள பிரதான விதியானது.

1. முதலாம் விதி 2. மூன்றாம்விதி 3. நான்காம்விதி
4. ஐந்தாம்விதி 5. ஆறாம்விதி

07. நீ நன்றாகப் படித்தால் சித்தி அடைவாய் அதேவேளை நீ நன்றாகபயிற்சி எடுத்தால் தொழில் பெறுவாய் நீ நன்றாகப் படிக்கிறாய் அல்லது பயிற்சி எடுக்கிறாய் ஆகவே நீ சித்தியடைவாய் அல்லது தொழில் பெறுவாய் எனும் வாதம் எவ்வகை இருதலைக்கோள் ஆகும்.

1. எளிய ஆக்கப்பாடு 2. எளிய அழிவு 3. சிக்கலாக்கப்பாடு
4. சிக்கல் அழிவு 5. சிக்கல் இருதலைக்கோள்

08. நான்கு உருக்களிலும் எத்தனை பிரகாரங்கள் உள்ளன.

1. 19 2. 04 3. 64 4. 256 5. 356

09. எடுகூற்றில் ஒன்று குறையாயின் முடிவும் குறையாக இருக்க வேண்டும் என்ற நியதியின் படி அமைக்கக்கூடிய சரியான சந்தர்ப்பம்

1. (I,I) 2. (I,O) 3. (E,A) 4. (E,I) 5. (O,O)

10. a) M P E b) P M A c) M P I d) M P A e) M P O
S M A S M A M S I M S A S M O
S P E S P A S P I S P I S P O

மேலுள்ளவற்றுள் வாய்ப்பான வடிவமாக அமைவது

1. a, b ஆகியன 2. a,d,e ஆகியன 3. d,e ஆகியன
4. c,e ஆகியன 5. a,c ஆகிய

www.lkedu.lk

பகுதி - 02

01. நியாயத்தொடையை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வாதங்களின் வாய்ப்பினைத் துணிக.

1. எல்லா மருந்துகள் ஆரோக்கியமானவை ஆகும் என்பதோடு சில உணவுகள் மருந்துகள் ஆகும் ஆகவே எல்லா உணவுகளும் ஆரோக்கியமானவை ஆகும்.

2. சில கனவுகள் நிஜமாகும். அத்துடன் சில கனவுகள் நினைவுகளாகும். ஆகவே எந்த நினைவுகளும் நிஜம் அல்ல

3. கவிதைகள் சில அரசர்களைபுகழ்வது அல்ல ஏனெனில் அரசர்களைப் புகழ்வது சில காவியம் அல்ல. அத்துடன் காவியம் சில கவிதைகள் ஆகும்.

4. பரீட்சையில் சிலர் சித்தியடைவர் அத்துடன் பரீட்சைகள் சில கடினமானதும் இலகுவானதும் ஆகும் ஆகவே சில இலகுவானது கடினமானதாகும்.

5. எந்த சினிமாவும் சமூகநோக்குடையது அல்ல என்பதுடன் எல்லா நாடகங்களும் சமூக நோக்குடையது ஆகும். ஆகவே எந்த நாடகங்களும் சினிமா அல்ல

02. பின்வருவனவற்றில் மூன்றிற்கு சிறுகுறிப்பு வரைக.

1. இருதலைக்கோள்
2. அரிஸ்டோட்டிலின் நியாயமாலைக்கும், கொள்ளீனியனின் நியாயமாலைக்கும் இடையிலான வேறுபாடு
3. இந்திய அளவையியல்
4. தூயநியாயத்தொடை
5. அரிஸ்டோட்டிலின் நியாயத்தொடையில் காணப்படும் குறைபாடு

www.lkedu.lk